**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டபடி நான்கு இடங்களில் துணைக் கருவூலங்கள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருக்கின்றது. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருச்சுழி என்ற இடத்திலும் தஞ்சை மாவட்டத்தில் திருவையாற்றிலும், தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூரிலும் மதுரை மாவட்டத்தில் தேனி என்ற இடத்திலும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### இராமநாதபுரத்தில் சப்-கோர்ட் ஏற்படுத்தும் திட்டம்.

* **வினா எண் 37—திரு. த. இராமசாமி** : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரத்தில் சப்-கோர்ட் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) இராமநாதபுரத்தில் நீதிமன்ற கட்டிடங்கள் கட்டும் திட்டம் தற்போது என்ன நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : (அ) இல்லை.

(ஆ) நிதிநிலை காரணமாக இத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

**திரு. த. இராமசாமி** : பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் எஸ்.எம். கோர்ட்டும், எஸ்.டி.எம். கோர்ட்டும்தான் இருக்கின்றன. சப்-கோர்ட் இல்லாத காரணத்தால் முதுகுளத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் உள்ளவர்கள் வழக்குகளுக்காக சிவகெங்கைக்குத்தான் செல்லவேண்டிய அவல நிலை இருக்கின்றது. இந்த நிலையை மாற்றுகின்ற வகையில் அங்கே சப்-கோர்ட் ஏற்படுத்தும் நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : பேரவைத் தலைவரவர்களே, நீதிமன்றங்களின் அதிகார வரம்புக் குழு இதுபற்றி பரிந்துரை செய்யாததன் காரணத்தால்தான் இந்த ஆண்டு அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. அடுத்த ஆண்டு உயர் நீதிமன்றம் இதுபற்றி பரிந்துரை செய்தால் அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. இராமசாமி** : பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய நீதிமன்றங்களின் கட்டிடங்கள் பாழடைந்த கட்டிடங்களாக இருக்கின்றன. ஆகவே அரசு புதிய, சொந்தக் கட்டிடங்கள் கட்டுகின்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1980 ஜூலை 23]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, உயர்நீதி மன்றங்களின் திட்டங்களின் கீழ் இதுபற்றி அரசுக்கு பரிந்துரை செய்யப் பட்டது. நடப்பாண்டிலே நிதிநிலை தட்டுப்பாட்டின் காரணமாக இது மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே அடுத்த ஆண்டு இதனை மேற்கொள்வது பற்றி ஆய்வு செய்யலாம்.

**திரு. மு. அம்பிகாபதி :** பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரத்தில் சப்-கோர்ட் ஏற்படுத்துவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஆனால் மன்னார்குடியிலே இருக்கின்ற சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டை எடுத்துவிடுவதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரிகின்றதே. அது தடுத்து நிறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பற்றித் தனிக்கேள்வி போடுங்கள்.

**திரு. ப. நெடுமாறன் :** பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரத்திலே நீதிமன்றங்களுக்குரிய கட்டிடங்கள் கட்டி அங்கே சப்-கோர்ட்டை ஏற்படுத்தினால் மதுரை கோர்ட்டில் இருக்கக்கூடிய இட நெருக்கடியைக் குறைப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே அந்த வகையிலே அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு இட நெருக்கடியைக் குறைப்பது மட்டும் அரசின் நோக்கமல்ல. இராமநாதபுரம் மக்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற காரணத்தால் அவர்களுக்கும் தனியாக அலுவலகங்கள் கட்ட வேண்டும் என்ற கொள்கைக் குறிப்பினை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இது குறித்து நடவடிக்கை மேற்கொள்வதற்காக நாங்கள் ஆய்வு செய்ய இருக்கிறோம்.

**திரு. இரா. கருப்பையா :** தலைவரவர்களே, இம்மாதிரி சப்-கோர்ட் அமைப்பதிலே ஏதாவது நியதிகளை அரசு நிர்ணயித்திருக்கின்றதா ? அம்மாதிரி நிர்ணயிக்கப்பட்ட அனைத்து இடங்களிலும் சப்-கோர்ட் ஏற்படுத்தப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, நீதிமன்றத்தின் குழு ஒன்று இதுபற்றி அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. தேவையின் அடிப்படை, நிதிநிலை ஆகிய அனைத்தையும் கருத்தில் கொண்டு தான் இதுபற்றி அரசு முடிவு எடுக்கிறது.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன் சமர்ப்பித்த பாலிசிநோட்டில் என்னென்ன சப்-கோர்ட்டுகள் அமைக்கப்படும் என்று லிஸ்ட் கொடுத்திருக்கிறார்கள். எப்பொழுது, எவை எவை எடுத்துக் கொள்ளப் பெறும் என்று ஏதாவது புரோக்கிராம் இருக்கிறதா ? இருந்தால் அவை பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் மசோதாவின் மீது பேசுகையிலேயே அதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். எதை எதை இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப் பெறும், அடுத்த ஆண்டு எதை எதை எடுத்துக் கொள்ள அரசு உத்தேசித்துள்ளது என்று விரிவாக அப்பொழுதே சொல்லியிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் இருக்கும் சப்-கோர்ட்டை இராமநாதபுரத்திற்கு மாற்றுவது பற்றி, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகையில் அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்ளப் பெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த இடத்தில் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு மாற்றப்படும் என்று நான் சொல்லவில்லை. அடுத்த ஆண்டு அதற்கான கட்டடம் கட்டுவதற்கான ஆய்வு முடிவு செய்யப்பெறும் என்று தான் சொன்னேன்.

**பனையடிக் குத்தகை காய்கறி கூட்டுறவு சங்கம், கத்தரிப்புலம்.**

*** வினா எண் 38—திரு. எம். எஸ். மாணிக்கம் :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், கத்தரிப்புலம் பனையடிக் குத்தகை காய்கறி கூட்டுறவு சங்கம், காய்கறிகள் ஏற்றிச் செல்ல வாகனவசதி கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு எப்பொழுது வேன் வழங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(ஆ) இச்சங்கம் தற்போது செய்கின்ற காய்கறி விற்பனை ஒரு 'வேன்' வைத்துக்கொள்ள வேண்டிய அளவுக்கு இல்லை. தனியாக ஒரு 'வேன்' வைத்துக்கொள்வது சங்கத்தின் பொருளாதார நிலைமைக்கு உகந்ததாக இராது என்று கருதப்படுகிறது.